# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் மற்றும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒகத்து மாதம் 21 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 15.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

### *2009 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் மற்றும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்*

[*2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச. வ. ஓ. 57/2005*

***அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் என அழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பு நிலையமொன்றையும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமொன்றையும் தாபிப்பதற்கும் ; அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப் பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் மற்றும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*அம்புலுவாவ திசாநாயக முதியான் சேலாகே ஜயரத்ன மத நிலையத்தையும் மற்றும் உயிரியற் பன்வகைத் தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்.*

***2.*** *(1) அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் மற்றும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என அழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).*

*(2) நிதியமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அது அப்பெயரில் வழக்குத்தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.*

2 -PL 004115-1,115 (2009/06)

*நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.*

**3.** (1) நிதியத்தின் நிர்வாகம், முகாமை, கட்டுப்பாடு என்பன இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அமைத்துரு வாக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) தாபகர் ;

(ஆ) சூழல் மற்றும் இயற்கை வளங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(இ) புத்தசாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஈ) தாபகரால் நியமிக்கப்பட்ட ஏழு ஆட்கள் (இதனகத்துப் பின்னர் "நியமன உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).

(3) தாபகர் சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(4) சபையின் நியமன உறுப்பினர் ஒருவர் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்திலான அறிவித்தலின்மூலம் எந்நேரத்திலும் அவரது பதவியைத் துறக்கலாம்.

(5) ஆளொருவர் –

(அ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கி முறிந்த ஒருவராக வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கி முறிந்த ஒருவராக இருப்பின் ; அல்லது

(ஆ) ஆறு மாதங்களுக்குக் குறையாத தவணையொன்றுக்கு மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படற்பாலதான ஒழுக்கநெறி சம்பந்தப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(இ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராக அல்லது உளரீதியில் குறைபாடுடையவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்,

சபை உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதினின்றும் அல்லது தொடர்ந்து இருப்பதினின்றும் தகைமையிழந்தவராதல் வேண்டும்.

(6) சபையின் நியமன உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் (7) ஆம், (8) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(7) சபையின் நியமன உறுப்பினர் ஒருவர் அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் இறப்பினால், பதவிதுறத்தலினால் அல்லது வேறுவகையில் அவரது பதவியை வறிதாக்குமிடத்து, அவரைப் பின்னுறுபவர் அவரை முன்னுற்றவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) தாபகர் எவரேனும் நியமன உறுப்பினரை குறித்தொதுக் கப்படும் காரணங்கள்மீது எவ்வேளையிலும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(9) சபையின் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்குத் தங்களிடையேயிருந்து தவிசாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(10) சபை உறுப்பினர்களிடையே ஏதேனும் அபிப்பிராய பேதம் ஏற்படும் பட்சத்தில் பெரும்பான்மையோரின் முடிவே பிணிக் கின்றதும் பயனுறுதியுடையதாதலும் வேண்டும்.

(11) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

(12) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(13) சபை, (10) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களின் செயற்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

நிதியத்தின் குறிக்கோள்கள்.

**4**. நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) அம்புலுவாவ திசாநாய முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையத்தையும் உயிரியற் பன்வகைத் தொகுதியையும் பற்றிப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஆ) அம்புலுவாவ மலைத்தொடரைச் சுற்றியுள்ள இடப்பரப்பை மேம்படுத்துதல் ;

(இ) சமுகத்தினரிடையே சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல் ;

(ஈ) மதங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் சமூக ஒருங்கிணைப்பையும் ஊக்குவித்தலும் தூண்டுதலும்;

(உ) இலங்கையர்களின் மத மேம்பாட்டை ஊக்குவித்தல் ;

(ஊ) மதத்துறையில் இலங்கையர்களின் அறிவையும் புரிந்துணர்வையும் உயர்த்துதல் ;

(எ) சமூகத்தில் பொருளாதார, சமூகரீதியில் வசதிகுறைந்த ஆட்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல், வேறு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும் உட்பட அவர்களின் உறைவிடங்களை மேம்படுத்துதலும் ;

(ஏ) வங்கிகளிலும் வேறு நிதி நிறுவனங்களிலும் விவேகமுடன் முதலீடு செய்யுமாறு மக்களைத் தூண்டுதல் ;

(ஐ) நிதியத்தின் குறிக்கோள்களுடன் ஒத்த குறிக்கோள்களையுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் உறவுகளைத் தாபித்தல் ;

(ஒ) நிதியத்தின் குறிக்கோள்களுள் எவற்றையும் ஒத்த ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுக்கு நிதி மற்றும் வேறு உதவிகளை வழங்குதல் ;

(ஓ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மதத்துறைகள் பற்றிய கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்குசெய்தல் ;

(ஔ) மனித உரிமைகளையும் கடமைகளையும் நீதிக்கான அணுக்கத்தையும்பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் ;

(க) மக்களின் விளையாட்டுத்துறை மற்றும் பொழுதுபோக்கு ஆற்றல்களை மேம்படுத்துவதற்குப் போதிய வசதிகளை வழங்குதல் ;

(ங) சகவாழ்வு என்ற மதக்கோட்பாடுகளின் அடிப்படையில் உலக சமாதானத்தை நோக்கி நாட்டை இட்டுச் செல்லுதலும் அதன்மூலம் திட்டமிடப்பட்ட அபிவிருத்திக்கான வழிகளைத் தாபித்தலும் ;

(ச) பொதுமனிதனின் அபிவிருத்திக்கும் நலனோம்பலுக்கும் இளைஞர் தொழில்வளத்தைப் பயிற்றுவித்தல் ;

(ஞ) சமூகத்தினுள் விவசாயிகளை ஊக்குவித்தலும் இளைஞர் விவசாய ஒழுங்கமைப்புக்களைத் தாபித்தலும் ;

(ட) முன்னிலைத் தொழிற்பயிற்சிக்கும் விளையாட்டுத் துறையிலும் இளைஞர்களின் விசேட கவனத்தை ஈர்த்தல் ;

(ண) கருத்தரங்குகளையும் விரிவுரைகளையும் கண்காட்சி களையும் லொத்தர்களையும் கல்விச் சுற்றுலாக் களையும் நடத்துதல் ;

(த) நூலகங்களைத் தாபித்தலும் பேணுதலும் ; அத்துடன்

(ந) தலைமுறை தலைமுறையாக சுதேச மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆட்களின் நலன்களைப் பாதுகாத்தலும் இலங்கையில் வளரும் மூலிகை களையும் மருத்துவத் தாவரங்களையும் பாது காத்தலும்.

*நிதியத்தின் இலச்சினை.*

**5**. நிதியத்தின் இலச்சினையானது –

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய முறையில் மாற்றப்படலாம் ;

(இ) சபையின் அங்கீகாரத்துடனும் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது.

*நிதியத்தின் தத்துவங்களும் பணிகளும்.*

**6.** (1) சபை, நிதியத்தின் பெயரில் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதற்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது இடைநேர் விளைவான எல்லா விடயங்களையும் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கும் மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தால் அல்லது ஏதேனும் கொள்வனையின், மானியத்தின், கொடையின், மரண சாதனக் கையளிப்பின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் கையாள்வதற்கும் அத்துடன் சபை எந்த ஆதனத்திற்கு உரித்துடையதாகின்றதோ அந்த ஏதேனும் ஆதனத்தை விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும், மானியமாக அளிப்பதற்கும், உரித்து மாற்றுவதற்கும் அறுதி மாற்றுவதற்கும் சாட்டுதல் செய்வதற்கும் கொடுத்து மாற்றுவதற்கும் அல்லது வேறுவகையில் கையளிப்பதற்கும் ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு என உள்ளூரிலும் வெளிநாட்டிலும் மானியங்களை, அறக்கொடைகளை அல்லது புலமைப் பரிசில்களை வழங்குதலுக்கும் ;

(ஈ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு லொத்தர்களை நடத்துதல் அத்துடன் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்திற் கமைய பணம் திரட்டுவதற்கும் ;

(உ) நேரடியாக அல்லது சபையால் அதன்பொருட்டு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள் ஊடாக தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அத்துடன் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்வதற்கும், புரிவதற்கும் ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நிதியத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் தொழிலுக்கமர்த்துவதற்கும் அவர்களுக்கு ஊதியமளிப்பதற்கும் அதன் ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும் அத்துடன் அவர்களுக்கு விடுப்பும் வேறு நலன்களும் வழங்குவதற்கும் ;

(எ) நிதியத்திற்குரிய அல்லது அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டுமானத்தை நிறுவுவதற்கும் ;

(ஏ) நிதியத்துக்குரிய பணத்தை சபையின் தற்றுணிபின் படி, நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உட்பட, பணத்தை முதலீடு செய்வதற்கு சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய எவையேனும் முதலீடுகளில் முதலீடு செய்வதற்கும், சபையின் தற்றுணிபில் அத்தகைய முதலீடுகளை மீளமைப்பதற்கும், மீள முதலீடு செய்யவும், வேறுபடுத்தவும், அத்துடன் அத்தகைய முதலீடுகளிலிருந்து திரளும் வருமானத்தை சேகரிப்பதும் ; அத்துடன்

(ஐ) வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் தொழிற் படுத்துவதற்கும் மூடுவதற்கும், பிணைப் பொறுப்பாக நிதியத்தின் ஆதனத்துடன் அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின்றி நிதியத்தின் நோக்கங்களுக்குப் பணத்தைத் திரட்டுவதற்கு அல்லது கடனெடுப் பதற்கும்.

நிதியத்திற்கு கொடுப்பனவுகள்.

**7**. நிதியத்திற்கு பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) தற்பொழுது நிதியத்தின் பெயரில் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரிடமிருக்கும் எல்லாப் பணங்களும் அம்புலுவாவ சூழல் அபிவிருத்தி மற்றும் பேணல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பெயரில் வங்கிகளிலிருக்கும் பணங்களும் ;

(ஆ) உள்ளூரில் அல்லது வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட திரட்டப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் பணம் அல்லது அளிப்புகள் அல்லது நன்கொடைகள் ;

(இ) நிதியத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திடமிருந்து காலத்துக்குக்காலம் பெறப்படும் மானியங்கள் ; அத்து டன்

(ஈ) நிதியத்திற்கு வருமதியான முதலீடுகளில் அல்லது வேறு பெறுமதிகளிலிருந்து ஏதேனும் வருமானம்.

நிதியத்திலிருந்து கொடுப்பனவு.

**8**. நிதியத்திலிருந்து பின்வரும் கொடுப்பனவுகள் செலுத்தப் படுதல் வேண்டும் :-

(அ) நிதியத்தைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் தொழிற் படுத்துவதற்கும் அவசியமான செலவுகள் ;

(ஆ) அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் வேறு ஊழியர்களுக்கும் சம்பளங்களின் கொடுப்பனவு ; அத்துடன்

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக் கத்திற்கு அவசியமானவையென சபையால் அங்கீகரிக் கப்பட்டவாறான அத்தகைய எல்லாக் கொடுப்பனவு களும்.

*நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்தங்கள் முதலியன நிதியத்திற் கானவை எனக் கருதப்படுதல்.*

**9**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் உளதாம் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் நிதியத்தின் ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் தனிசுகளாகவும் பொறுப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வு களும்.*

**10**. (1) சபையானது நிதியத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புகள் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றின் தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) சபை ஒவ்வோராண்டிலும் திசெம்பர் 31 ஆம் தேதி யன்றுள்ளவாறு அதன் புத்தகங்களை சமநிலைப்படுத்தச் செய்வித்தலும் வேண்டும் என்பதுடன் அடுத்த மாச்சு மாதம் முப்பத்தோராம் தேதிக்கு முன்னர் வரவு செலவுக் கணக்கையும் மேற்கூறப்பட்ட தேதிவரை தயாரிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்களின் பொழிப்பொன்று அடங்கிய ஐந்தொகை யொன்றையும் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) வருமான செலவினக் கணக்கும் ஐந்தொகையும், கையொப்ப மிடுவதற்கு சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) கணக்காளர் தலைமையதிபதி அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க நிதியத்தின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

*நிதியத்தின் நிதியாண்டு.*

**11**. நிதியத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண் டும்.

*தீர்வைகளின் கொடுப்பன விலிருந்து நிதியம் விலக்களிக்கப்படுதல்.*

**12**. அமைச்சர், நிதியத்தின் இலக்குகளையும் குறிக்கோள் களையும் நடைமுறைப்படுத்துவதனை வசதி செய்வதற்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப் பாட்டுடன் நிதியத்தின் வருமானம் அல்லது இலாபங்கள் மீது

எவையேனும் தீர்வைகளின், அறவீடுகளின் அத்துடன் ஏதேனும் வரியின் கொடுப்பனவிலிருந்து 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய தீர்வையின், அறவீட்டின் அல்லது வரியின் விதிப்பனவை ஆளுவதான அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய அளவுக்கு நிதியத்திற்கு விலக்களித்தல் வேண்டும்.

செலவுகளின் மீளளிப்பு.

**13**. (1) ஏதேனும் நீதிமன்றத்தின்முன் நிதியத்தால் அல்லது நிதியத்திற்கு எதிராகக் கொணரப்படும் ஏதேனும் குற்ற வழக்கில் அல்லது துடர்ச்சியில் நிதியத்தால் உறப்படும் செலவு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய குற்ற வழக்கில் அல்லது துடர்ச்சியில் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது நிதியத்தால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கெதிரான ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொணரப்பட்ட ஏதேனும் குற்ற வழக்கில் அல்லது துடர்ச்சியில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால், அத்தகைய செலவு அத்தகைய குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் அவரால் அறவிடப்பட்டாலன்றி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல்.

**14**. நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*நிதியம் இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

**15**. நிதியம், இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்.

*தாபகரைப் பின்னுறுதல்.*

**16**. தாபகர் இறக்கும் பட்சத்தில் தாபகரின் மகன் தாபகரைப் பின்னுறுதல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் மூத்த ஆண் வாரிசு பின்னுறுபவராதலும் வேண்டும்.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகள் உறுதியின் ஏற்பாடுகளை மேலோங்கி நிற்றல்.*

**17**. அம்புலுவாவ சூழல் அபிவிருத்தி மற்றும் பேணல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுவனவாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அம்புலுவாவ சூழல் அபிவிருத்தி மற்றும் பேணல் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் ஏற்பாடுகளுக்குமிடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**18**. இச்சடத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**19**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி –

"அம்புலுவாவ சூழல் அபிவிருத்தி மற்றும் பேணல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்பது, மாண்புமிக்க திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன என்பவருக்கும்

அதன்மீதான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் முகாமைச்சபை உறுப்பினர்களுக்கும் (88 ஆம் அத்தியாயமான) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகிய இலங்கை பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்குமிடையேயும் அவர்கள் மத்தியிலும் 2000, செத்தெம்பர் 1 ஆம் தேதியன்று கண்டியில் செய்யப்பட்டதும் கைச்சாத்திடப்பட்டதுமான ஒப்பந்த உறுதி முறியினாலும் நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகையினாலும் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என்று பொருள்படும் ; அத்துடன்

“தாபகர்” மாண்புமிக்க திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன ஆதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்